










1-855-626-0002
https://orientationontario.ca





# Orientation to Ontario

## மோசடிகளைத் தவிருங்கள்

### போலியான இணையத்தளங்களும் இணையத்தள மோசடிகளும்

குற்றவாளிகள் ஒரு உண்மையான இணையத்தளத்தைப் பிரதிபண்ண அல்லது தொழில்முறையானதாகக் காட்சியளிப்பது போன்று உருவாக்க முடியும். இணையத்தளங்கள் கனடா அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களாக அல்லது அதன் பங்காளர்களின் ஒன்றாக இருக்கின்றன என்று கூறப்படலாம். ஏனைய இணையத்தளங்கள் விசேடமான குடிவரவு ஒப்பந்தங்களை அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட அதிக சம்பளம் வழங்கும் தொழில்களை வழங்குபவையாகக் கூறலாம். இவற்றை அவர்கள் அடையாளங்களைத் திருடுவதற்காகவும் அவற்றுக்குப் பணம் கட்டுவதற்கு மக்களை ஏமாற்றிச் சூழ்ச்சி செய்வதற்காகவும் செய்கின்றனர்.

- ஒரு இணையத்தளம் குடியேற விரும்பும் நபர்களுக்கு விசேடமான ஒப்பந்தங்களை வழங்குவதாக உரிமை கோரினால், அவ்விணையத்தளத்தை விட்டு வெளியேறுக. இந்தக் உரிமை கோரல்கள் உண்மைக்குப் புறம்பானவை.
- நீங்கள் ஒரு இணையத்தளத்திற்குள் நுழையும் போது உங்களுடைய உலாவியின் முகவரிப் பட்டியில் உள்ள முகவரியைச் சரிபார்க்கவும். நீங்கள் தட்டச்சுச் செய்த முகவரியுடன் இது பொருந்த வேண்டும்.
- அந்த இணையத்தள முகவரி பாதுகாப்பானது தான் என்பதைக் காட்டுவதற்காக உலாவி சாளரத்தில் ( o indo ) பூட்டு அடையாளம் அல்லது இணையத்தள முகவரியின் தொடக்கத்தில் “htt ” என்று இருந்தாலே ஒழிய, தனிப்பட்ட தகவல்களை ஒருபோதும் பதிய வேண்டாம்

### மின்னஞ்சல், குறுஞ்செய்தி மோசடிகள்

நீங்கள் ஒரு மின்னஞ்சலை, அது நிதி நிறுவனங்கள், வர்த்தகங்கள் அல்லது அரசு முகவரகங்கள் போன்ற சட்டமுறைப்படியான ஒரு அமைப்பிலிருந்து வந்ததைப் போன்று பெறலாம். அது உங்களிடம் உங்களுடைய பிறந்த திகதி, கடவுச்சொற்கள் அல்லது கடனட்டை விபரங்கள் போன்ற தனிப்பட்ட தகவல்களைக் கேட்கலாம். சில சமயங்களில் அம்மின்னஞ்சல் உங்களை ஒரு போலியான இணையத்தளத்தைப் பார்வையிடுமாறு கூறும்.

- கீர்த்திமிக்க நிறுவனங்கள் உங்களிடம் மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி வழியாகத் தனிப்பட்ட தகவல்களை ஒருபோதும் கேட்காது.
- நீங்கள் இவ்வகையான மின்னஞ்சலைப் பெற்றால், எந்தவொரு இணைப்பையும்

Funded by / Financé par :

Ontario

Immigration, Refugees and Citizenship Canada

Immigration, Réfugiés et Citoyenneté Canada

தொடக்காதீர்கள் அல்லது உங்களைப் பற்றிய எந்தவொரு தகவலையும் வழங்காதீர்கள்.

- உமக்கு மின்னஞ்சல் எங்கிருந்து வந்தது என்பதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், அனுப்புநரின் அடையாளத்தைச் சரிபார்ப்பதை உறுதி செய்க. மின்னஞ்சல் மோசடிகள் பொதுவாக ஒரு தனிப்பட்ட முகவரியிலிருந்து அல்லது இலவச இணைய அஞ்சல் முகவரியிலிருந்து (Yahoo, Hotmail அல்லது Gmail) அனுப்பப்படும், ஆனால் கனடா அரசாங்கத்தின் “gc.ca” அல்லது “Canada.ca” மின்னஞ்சல் கணக்கிலிருந்து அல்ல.
- தெரியாத தொடர்புகளின் தொடர்பாடல்களைப் புறக்கணித்து அவற்றை நீக்கி, எல்லாச் சாதனங்களிலும் உங்களுடைய நச்சுநிரல் எதிர்ப்பை (Antivirus) இற்றைப்படுத்துக.
- வேண்டா அஞ்சல் (Spam) செய்திகளுக்கு, அவற்றிலிருந்து விலகுவதற்குக் கூடப் பதிலளிக்க வேண்டாம், அத்துடன் எந்த இணைப்புகளையும் திறக்கவோ எந்த இணைப்புகளையும் பின்தொடரவோ வேண்டாம்.

## தொலைபேசி மோசடிகள்

குற்றமிழைப்பவர்கள் Immigration (குடிவரவு), Refugees and Citizenship Canada (IRCC) (அகதிகள், குடியுரிமை கனடா (IRCC)), Canada Revenue Agency (CRA) (கனடா வருவாய் முகவரகம் (CRA)) அல்லது பொலிஸ் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் போல் நடித்து, தொலைபேசி வழியாக மக்களைச் சூழ்ச்சிக்குள்ளாக்க முயற்சிக்கலாம். IRCC, CRA அல்லது பொலிஸ் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் உங்களை பணத்தை வைப்புச் செய்யவோ, பணத்தைப் பரிமாற்றம் செய்யவோ குடியேற விரும்பும் நபர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கவோ அழைக்க மாட்டார்கள். சில சமயங்களில் அவர்கள் ஒரு விண்ணப்பத்தைத் தொடர்ந்து செயன்முறைப்படுத்துவதற்கு அல்லது மேலதிக ஆவணங்களைக் கேட்பதற்கு உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளக் கூடும்.

- மக்கள் உங்களுடைய பணத்தை அல்லது அடையாளத்தைத் திருடுவதற்காகத் தொலைபேசி மோசடிகளைப் பயன்படுத்த முடியும்.
- கடனட்டைகள், வங்கிக் கணக்கு இலக்கங்கள் அல்லது வேறு ஏதேனும் கட்டணத் தகவல்கள் போன்ற விபரங்களைக் கேட்கும் தொலைபேசி மோசடிகளில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும்.
- நீங்கள் ஒரு சந்தேகத்திற்கிடமான அழைப்பைப் பெற்றால், உடனடியாகத் தொலைபேசி அழைப்பைத் துண்டித்து, அதைத் தெரிவிப்பதற்கு உங்களுடைய உள்ளூர் பொலிசாரைத் தொடர்புகொள்க. நீங்கள் Canadian Anti-Fraud Centre (கனேடிய மோசடி தடுப்பு நிலையம்) ஐயும் தொடர்பு கொள்ளலாம்.

**நினைவில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

**கனடா அரசாங்கமோ பொலிசாரோ ஒருபோதும் ஆக்ரோஷமான அல்லது அச்சுறுத்தும் மொழியைப் பயன்படுத்த மாட்டார்கள்.**

**கனடா அரசாங்கம் தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி வழியாக எந்தவொரு கட்டணத்தையும் உங்களிடம் கேட்காது.**


CRA ஒருபோதும் முற்பணக் கடனட்டைகள், பரிசு அட்டைகள் வழியாகப் பணத்தை அல்லது கட்டணங்களைக் கேட்டு ஒரு மின்னஞ்சலை அல்லது குறுஞ்செய்தியை அனுப்ப மாட்டாது, அல்லது இ-பரிமாற்றத்துக்காகத் தொடர்புகொள்ள மாட்டாது.

IRCC ஒருபோதும் தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி வழியாக உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைக் கேட்கத் தொடர்பு கொள்ளாது. அவர்கள் சில வேளைகளில் ஒரு விண்ணப்பத்தைத் தொடர்ந்து செயன்முறைப்படுத்துவதற்காகக் மேலதிக ஆவணங்களைக் கேட்க உங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

கனடா அரசாங்கம் மின்னஞ்சல் வழியாக விசாக்களை அனுப்புவதில்லை.















## CANADIAN ANTI-FRAUD CENTRE (கனேடிய மோசடி தடுப்பு மையம்)

Canadian Anti-Fraud Centre (CAFC) (கனேடிய மோசடி தடுப்பு மையம்) என்பது வெகுஜன சந்தைப்படுத்தல் மோசடி, முற்கூட்டிய கட்டண மோசடி, இணைய மோசடி, இனங்காணல் திருட்டு முறைப்பாடுகள் போன்ற விடயங்களில் தகவல்களையும் குற்றவியல் நுண்ணறிவுகளையும் சேகரிக்கின்ற கனடாவின் மத்திய முகவரகமாகும். உங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதைப் பற்றி அறிந்து கொள்வதற்கு, antifraudcentre.ca ஐப் பார்வையிடுக.

### முக்கிய குறிப்பு:

மோசடி, திருட்டு, ஏனைய குற்றங்களை உங்களுடைய உள்ளூர் பொலிஸ் திணைக்களத்துக்குத் தெரிவிக்கவும்.

தேவையற்ற அல்லது சந்தேகத்திற்கிடமான மின்னஞ்சல்களை spam@fightspam.gc.ca இல் Spam Reporting Centre (வேண்டா அஞ்சல் அறிக்கையிடல் மையம்) இற்கு அனுப்புக.

### உங்களுக்குத் தெரியுமா?

**நீங்கள் ஒரு மோசடிக்காரரால் மோசடிக்குள்ளாக்கப்பட்டாலோ இலக்கு வைக்கப்பட்டாலோ, நீங்கள் அதை எப்போதும் அறிக்கைப்படுத்த வேண்டும். எங்கு அறிக்கைப்படுத்துவது என்பது பற்றிய அறிவுரையைப் பெறுவதற்காக Canadian Anti-Fraud Centre (1-888-495-8501) (கனேடிய மோசடி தடுப்பு மையம் (1-888-495-8501) ஐ அல்லது Competition Bureau (1-800-348-5358) (போட்டிப் பணியகம் (1-800-348-5358)) ஐத் தொடர்பு கொள்க.**

### வளங்கள்:

Canadian Anti-Fraud Centre:
antifraudcentre.ca


Competition Bureau:
competitionbureau.gc.ca

Government of Canada:
canada.ca

The Little Black Book of Scams:
competitionbureau.gc.ca/eic/site/cb-bc.nsf/eng/04333.html#sec10















orientation to ontario
l'ontario c'est chez moi